21

169831

1981-5-08

Sri Lanka இலங்கை

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்

## பாராளுமன்றம்

---

# 1980 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்கப் பீடைகொல்லிகளைக் கட்டுப்படுத்தற் சட்டம்.

---

[1980, செத்தெம்பர் மாதம் 5 ஆந் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.]

அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது

---

1980, ஒற்றோபர் மாதம் 03 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது

---

கொழும்பு, அரசாங்க வெளியீட்டு அலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.

விலை : சதம் 90 தபாற் செலவு : சதம் 35

# 1980 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்கப் பீடைகொல்லிகளைக் கட்டுப்படுத்தற் சட்டம்

[1980, செத்தெம்பர் மாதம் 5 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது]

ச.வ.—ஓ. 13/79
1238

பீடைகொல்லிகளுக்கென உரிமம் அளிப்பதற்கு ஏற்பாடு செய்வதற்கும்; அவற்றை இறக்குமதி செய்தல், பொதியிடுதல், அவற்றுக்குச் சுட்டுத் துண்டிடுதல், அவற்றைக் களஞ்சியப்படுத்தல், சூத்திரித்தல், இடம் பெயர்த்தல், விற்பனை செய்தல் அத்துடன் பயன்படுத்துதல் ஆகியவற்றை ஒழுங்குபடுத்துவதற்கும்; பீடைகொல்லிகளுக்கான உரிமமளிக்கும் அதிகாரியை நியமிப்பதற்கும்; பீடைகொல்லிச் சூத்திரிப்புக் குழுவினைத் தாபிப்பதற்கும்; அத்துடன் அவற்றுடன் தொடர்புபட்ட அல்லது அவற்றின் இடைநேர்விளைவான கருமங்களுக்கு ஏற்பாடு செய்வதற்குமான தொரு சட்டம்.

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—

சுருக்கப்பெயர்.

1. இச்சட்டம் 1980 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்கப் பீடைகொல்லிகளைக் கட்டுப்படுத்தற் சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

இச்சட்டத்தின் ஏற்புடைமை.

2. இச்சட்டம்—

(அ) வலுவூட்டிகளுடனான தீவிர கலவைக் கூறுகளுக்கும் பீடைகொல்லிச் சூத்திரிப்புகளுக்கும்; அத்துடன்

(ஆ) பீடைகொல்லிச் சூத்திரிப்புக்களின் தெளிதாங்கியின் அல்லது வேறு ஏதேனும் கொள்கலன்களின் பயன்பாட்டு நிலையில் சேர்ப்பதற்காக விற்கப்பட்டிருப்பின், பீடைகொல்லிச் சூத்திரிப்பில் சேர்க்கப்பட்டவை அல்லாத வேறு சேர்மான வலுவூட்டிகளுக்கும்,

ஏற்புடையதாகும்.

பீடைகொல்லிக் கான உரிமமளிக்கும் அதிகாரி.

3. (1) பீடைகொல்லிகளுக்கான உரிமமளிக்கும் அதிகாரியாக இருக்க வேண்டியவரான பீடைகொல்லிகள் பதிவாளர் ஒருவர் நியமிக்கப்படுதல் வேண்டும்.

(2) பீடைகொல்லிகள் பதிவாளரானவர், நஞ்சியலிலும், பீடைகளைக் கட்டுப்படுத்துவதோடு தொடர்புடைய உயிரியல் விடயங்களிலும் அறிவுடையவராயிருத்தல் வேண்டுமென்பதுடன், கமத்தொழிற் பணிப்பாளருக்கு வகைசொல்லவேண்டியவராயிருத்தலும் வேண்டும்.

பீடை கொல்லிச் சூத்திரிப்புக் குழு.

4. (1) இதனகத்துப்பின்னர் "குழு" என்று குறிப்பிடு செய்யப்படும் பீடைகொல்லிச் சூத்திரிப்புக் குழு ஒன்று இருத்தல் வேண்டும்.

(2) குழுவானது பின்வருவோரைக் கொண்டிருத்தல் வேண்டும் :—

(அ) பின்வரும் பதவிவழி உறுப்பினர்கள், அதாவது—

(i) இதனகத்துப்பின்னர் "பணிப்பாளர்" எனக் குறிப்பிடுசெய்யப்படுபவரும், கமத்தொழிற் பணிப்பாளர் என்ற பதவியை அப்போதைக்கு வகிப்பவருமான ஆள்; அத்துடன்

* 49924—11,325 (06/80)

(ii) இதனகத்துப் பின்னர் "பதிவாளர்" எனக் குறிப்பிடு செய்யப்படும் பீடைகொல்லிகளின் பதிவாளர் என்ற பதவியை அப்போதைக்கு வகிப்பவருமான ஆள்; அத்துடன்

(ஆ) அமைச்சரால் நியமிக்கப்படவேண்டியவர்களும், பீடைகொல்லிகளைப் பயன்படுத்துவதிலும், அல்லது பீடைகளைக் கட்டுப்படுத்துவதிலும், அத்துடன் அதனோடு உறவுபட்ட அறிவியற் கற்கைகளில் அநுபவம்வாய்ந்தவர்களும் ஆன எண்மருக்கு மேற்படாத ஆட்கள் :

ஆயின், எவ்வாறாயினும், பீடைகொல்லிகளின் உற்பத்தி, இறக்குமதி, சந்தைப்படுத்தல், சூத்திரித்தல், களஞ்சியப்படுத்தல், இடம்பெயர்த்தல் அல்லது விற்பனையில் வர்த்தக முறையான அக்கறையைக் கொண்டுள்ள எவரேனும் ஆள் அவ்வாறு நியமிக்கப்படுதல் ஆகாது.

(3) பணிப்பாளரானவர் சமுகமாயிருப்பாரெனில் அவரே குழுவின் எல்லாக் கூட்டங்களுக்கும் தலைமைதாங்குதல் வேண்டும். அத்தகைய ஏதேனும் கூட்டத்திற்குப் பணிப்பாளர் வருகைதராதுள்ளபோது, அத்தகைய கூட்டத்திற்குத் தலைமைதாங்குவதற்கென, சமுகமாயுள்ள உறுப்பினர்கள் தம்முள் ஒருவரைத் தெரிவு செய்தல் வேண்டும்.

(4) பதவிவழி உறுப்பினர்கள் அல்லாத ஏனைய ஒவ்வோர் உறுப்பினரும் இறப்பினால், பதவியிலிருந்து விலகுவதினால் அல்லது அமைச்சரால் அகற்றப்படுவதனால் முன்னரே பதவியை வறிதாக்கினாலொழிய, அத்தகைய பதவிக்கு அவர் நியமிக்கப்பட்ட தேதியிலிருந்து மூன்றாண்டு காலப்பகுதிக்குப் பதவி வகித்தல் வேண்டும் :

ஆயின், இறந்துள்ள அல்லது விலகியுள்ள அல்லது வேறுவகையில் பதவியை வறிதாக்கியுள்ள உறுப்பினர் ஒருவரின் இடத்தில் நியமிக்கப்படும் உறுப்பினர் ஒருவர், அவர் முன்னரே பதவியை வறிதாக்கினாலொழிய, அவர் எந்தவுறுப்பினரை அடுத்துப் பதவிக்கு வருகின்றாரோ அந்த உறுப்பினரின் பதவிக் காலத்தில் முடிவுறாதெஞ்சியுள்ள பாகத்துக்குப் பதவிவகித்தல் வேண்டும்.

(5) அமைச்சரானவர், கசெற்றில் வெளியிடப்படும் கட்டளை மூலம், பதவிவழி உறுப்பினர்கள் அல்லாத வேறு எவரேனும் உறுப்பினரை காரணம் எதுவும் காட்டாது பதவியில் இருந்து அகற்றலாமென்பதுடன், அத்தகைய அகற்றுகை நீதிமன்றம் எதிலும் கேள்விக்குட்படுத்தப்படுதலும் ஆகாது.

(6) காலம் கழிவதன்மூலம் பதவியை வறிதாக்கும் பதவிவழி உறுப்பினர் அல்லாத எவரேனும் உறுப்பினர் மீள நியமிக்கப்படுவதற்குத் தகவுடையவராதல் வேண்டும்.

(7) சுகவீனம் காரணமாக அல்லது இலங்கையில் இல்லாமை காரணமாக அல்லது வேறு ஏதேனும் காரணத்திற்காக எவரேனும் உறுப்பினர் ஏதேனும் காலப்பகுதியின்போது தமது பதவிக்குரிய கடமைகளைத் தற்காலிகமாகப் புரிய இயலாதவராக இருப்பின், (1) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளுக்கு இணங்க அத்தகைய உறுப்பினர் நியமிக்கப்பட்டது போன்று, அதே முறையில் அத்தகைய காலப்பகுதியின் போது

அவ்வாறு இடத்தில் செயலாற்றவென வேறு எவரேனும் ஆளை அமைச்சர் நியமிக்கலாம்.

(5) அமைச்சரானவர், நிதி என்னும் விடயத்திற்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரின் கலந்தாலோசனையுடன், அத்தகைய உறுப்பினர்களுக்கான ஊதியத்தையும் அதைக் கொடுப்பனவு செய்யும் முறையையும் தீர்மானிக்கலாம்.

5. (1) பீடைகொல்லிகளைப் பதிவுசெய்தல், கொள்கலன்களை அங்கீகரித்தல், அத்துடன் பீடைகொல்லிகளைக் களஞ்சியப்படுத்தல், குத்திரித்தல், இறக்குமதிசெய்தல், விற்பனைசெய்தல், அத்துடன் பயன்படுத்துதல் பற்றிய ஏதேனும் முக்கிய கருமம் தொடர்பாகவும், அத்துடன் இச்சட்டத்தின்கீழ் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகளால் விதித்துரைக்கப்படக்கூடியவையும் மேற்கூறியன பற்றியவையுமான அத்தகைய வேறு கருமங்கள் தொடர்பாகவும் பதிவாளருக்கு ஆலோசனை அளிப்பது குழுவின் பணிகளாக இருத்தல் வேண்டும். குழுவின் பணிகள்.

(2) (அ) குழுவானது பின்வரும் எல்லாக் கருமங்கள் தொடர்பிலும் அல்லது அவற்றுள் எவை தொடர்பிலும் விதிகளை ஆக்கலாம் :—

(i) அதன் கூட்டங்களிற் பின்பற்றப்படவேண்டிய நடவடிக்கைமுறை;

(ii) அதன் அலுவல்களை நடாத்துதல் ; அத்துடன்

(iii) அதன் அலுவல்களைக் கொண்டு நடாத்துவதுடன் தொடர்புபட்ட அல்லது அவற்றின் இடைநேர்விளைவான எல்லாக் கருமங்களும்.

(ஆ) குழுவின் எல்லா உறுப்பினர்களும் சமுகமாகவிருக்கும் கூட்டத்தில் அத்தகைய விதிகள் ஆக்கப்படுதல் வேண்டும்.

(இ) குழுவினால் ஆக்கப்பட்ட எந்த விதியும் அமைச்சரினால் அங்கீகரிக்கப்பட்டு வர்த்தமானியில் வெளியிடப்பட்டாலன்றி, பயனுடையதாதல் ஆகாது.

6. (1) ஏதேனும் பீடைகொல்லிக்கு உரிமம்பெற விரும்புகின்ற ஒவ்வோர் ஆளும், அதற்கெனப் பதிவாளருக்கு விண்ணப்பம் ஒன்றைச் செய்தல் வேண்டும். உரிமத்துக்கான விண்ணப்பம்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழான விண்ணப்பம் ஒன்று பின்வரும் விபரங்களைக் கொண்டிருத்தல் வேண்டும் :—

(அ) விண்ணப்பகாரரின் பெயரும் முகவரியும்;

(ஆ) எப்பீடைகொல்லி தொடர்பாக அத்தகைய விண்ணப்பம் செய்யப்பட்டதோ அப்பீடைகொல்லியினது உற்பத்தியாளரின் அல்லது தயாரிப்பாளரின் பெயரும் முகவரியும் ;

(இ) அத்தகைய பீடைகொல்லி எந்த உத்தேச வியாபாரப் பெயரின்கீழ் சந்தைப்படுத்தப்படவுள்ளதோ அல்லது விற்கப்படவுள்ளதோ அந்த உத்தேச வியாபாரப் பெயர் ;

(ஈ) அத்தகைய பீடைகொல்லி விற்கப்படவுள்ள ஏதேனும் கொள்கலத்தில் ஒட்டப்படவுள்ள வரைவுச் சுட்டுத்துண்டின் பிரதி ஒன்று ;

(உ) அத்தகைய பீடைகொல்லி எந்தக் கொள்கலத்தில் விநியோகிக்கப்படவுள்ளதோ அல்லது விற்கப்படவுள்ளதோ அந்தக் கொள்கலத்தின் மாதிரிகள் ;

(ஊ) அத்தகைய பீடைகொல்லியின் பயன்பாடுகள், வலுபயனுடைமை, பயனுறு காலம், விளைவு என்பன பற்றி உற்பத்தியாளரால் அல்லது தயாரிப்பாளரால் செய்யப்பட்ட கோரிக்கையின் ஒரு கூற்று ;

(எ) அத்தகைய பீடைகொல்லியின் கூட்டுச்சேர்க்கை, அதன் இரசாயன அடையாளம், தேறியநிறை, களஞ்சியத்தில் அதனது பயனுறுதி, பயன்பாட்டு முறைகள் அத்துடன் பயன்பாடு முடிவுறும் தேதி ஆகியன பற்றிய ஒரு கூற்று ;

(ஏ) முறிமருந்து பற்றிய தகவல் உட்பட, அத்தகைய பீடைகொல்லி பற்றிய போதியளவு நஞ்சியல் தரவுகள் ;

(ஐ) சூத்திரிக்கப்பட்ட கலவையின் இரசாயனப் பகுப்பாய்வு முறைகள் ;

(ஒ) அத்தகைய பீடைகொல்லியின் படிவுகளைத் தீர்மானிப்பதற்கான முறைகள் ;

(ஓ) அத்தகைய பீடைகொல்லியின் செயற்பாட்டுத் திறன் பற்றி அனுபவகை அல்லது வேறு பரிசோதனை நிலையங்களின் அல்லது ஆய்வுகூடங்களின் அல்லது உயிரியல்சார் சோதனைகளின் அறிக்கை ;

(ஔ) பதிவாளரினால் தேவைப்படுத்தக்கூடியனவும் பீடைகொல்லியின் செயற்பாட்டுத்திறன் அல்லது பாதுகாப்புப் பற்றியனவுமான அத்தகைய வேறு தகவல்கள்.

(3) (1) ஆம் உட்பிரிவின்கீழ்ச் செய்யப்பட்ட விண்ணப்பம் ஒன்றில் உள்ள தகவல் அந்தரங்கமானதாக விண்ணப்பகாரரால் கொடுக்கப்பட்டுள்ளவிடத்து, பதிவாளரினால் அது அந்தரங்கமானதாகக் கொள்ளப்படுதல் வேண்டும் :

ஆயின், சட்ட நீதிமன்றமொன்றினால் அவ்வாறு தேவைப்படுத்தப்படும்போது அத்தகைய தகவலை வெளிவிடுவது அவசியமாகுமிடத்து, இந்த உட்பிரிவின் முற்போந்த ஏற்பாடுகள் ஏற்புடையனவாகாது.

விண்ணப்பத்தைச் சீர்தூக்கிப் பார்த்தல்.

7. (1) ஆறாம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின்கீழான விண்ணப்பம் ஒன்று கிடைக்கப்பெற்றதன்மேல், பதிவாளரானவர்—

(அ) அந்தப் பீடைகொல்லியைப் பதிவுசெய்தல் வேண்டுமென்பதுடன் உரிமம் ஒன்றை வழங்குதலும் வேண்டும் ; அல்லது

(ஆ) அந்தப் பீடைகொல்லியைப் பதிவுசெய்தல் வேண்டுமென்பதுடன், உரிமம் வழங்கப்படும்வரை, இடைக்கால அனுமதிச்சீட்டு ஒன்றை அந்த அனுமதிச்சீட்டில் விதிக்கப்பட்டிருக்கும் நிபந்தனைகளுக்கு இணங்க, பீடைகொல்லியின் வரையறுக்கப்பட்ட சந்தைப்படுத்துதலுக்கும் பயன்பாட்டிற்குமாக வழங்குதலும் வேண்டும் ; அல்லது

(இ) விண்ணப்பத்தை நிராகரித்தல் வேண்டுமென்பதுடன் அத்தகைய நிராகரிப்புக்கான காரணங்களைக் கூறுதலும் வேண்டும்.

(2) ஓர் உரிமத்தின் அல்லது ஓர் அனுமதிச்சீட்டின் வழங்குகை, அந்த உரிமத்தில் அல்லது அனுமதிச்சீட்டில் கூறப்பட்டுள்ள காலப்பகுதிக்குப் பயனுடையதாதல் வேண்டுமென்பதுடன், அதற்கெனச் செய்யப்படும் விண்ணப்பமொன்றின்மீது மீளப் புதுப்பிக்கப்படக்கூடியதாதலும் வேண்டும். அத்தகைய மீளப்புதுப்பித்தலானது, சம்பந்தப்பட்ட பீடைகொல்லியின் மீதுள்ள தரவுகளைப் பதிவாளர் மீளாய்வுசெய்த பின்னரே புதுப்பிக்கப்படும் என்ற நிபந்தனைக்குட்பட்டதாக இருத்தல் வேண்டும்.

8. (1) விண்ணப்பத்துடன் சமர்ப்பிக்கப்பட்ட வரைவுச் சுட்டுத்துண்டின் பிரதி, பின்வரும் விபரங்களைச் சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் கொண்டிருந்தால் ஒழிய, 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (அ) என்னும் பந்தியின்கீழ் உரிமம் ஒன்றைப் பதிவாளர் வழங்குதல் ஆகாது :— உரிமம் வழங்குகை.

(அ) பீடைகொல்லி எந்த வியாபாரப் பெயரின்கீழ் விற்கப்படவுள்ளதோ அந்த வியாபாரப் பெயர் ;

(ஆ) பீடைகொல்லியின் வியாபாரப் பெயருக்குப் பயன்படுத்தப்பட்ட எழுத்துக்களின் அளவில் அரைவாசியிலும் பார்க்கச் சிறியதாயிராத அளவினவான எழுத்துக்களில் பீடைகொல்லியின் தீவிர கலவைக் கூறுகளின் பொதுவான பெயர்கள் ; இவை வியாபாரப் பெயருக்கு நேர் கீழே இடப்படுதல் வேண்டும் ;

(இ) பீடைகொல்லியின் கூட்டுச் சேர்க்கை பற்றிய ஒரு கூற்று ; இக்கூற்று, பீடைகொல்லியில் உள்ள தீவிர கலவைக் கூறுகள் இரசாயனவியற்படி இன்ன என்பதையும், என்ன நிறைக்கு என்ன நிறையில் அமைந்துள்ளன என்ற நூற்றுவீதத்தை எடுத்துரைப்பதோடு, எல்லாமாக நூறு வீதமாக அமைவதற்கு அப்பீடைகொல்லியில் அடங்கியுள்ள ஏனைய பொருட்களின் நூற்றுவீதத்தையும் எடுத்துக் கூறுதல் வேண்டும் ; அத்துடன் திரவ சூத்திரிப்புக்களின் விடயத்தில், அவற்றில் அடங்கியிருக்கும் தீவிர கலவைக்கூறுகள் லீற்றர் ஒன்றுக்கு எத்தனை கிராம் அளவில் உள்ளன என்பதையும் கூறுதல் வேண்டும் ;

(ஈ) உரிமம் வைத்திருப்பவரின் பெயரும் முகவரியும் ;

(உ) பீடைகொல்லி கடைசியாகப் பயன்படுத்தப்பட்டதற்கும், அது எந்தப் பயிருக்குப் பயன்படுத்தப்பட்டதோ அந்தப் பயிரின் அறுவடைக்கும் இடையில் கழியவேண்டியுள்ள காலப்பகுதியையும், அத்துடன் பதிவாளர் தேவையானதெனக் கருதுமிடத்து பீடைகொல்லியின் பயனுறுகாலம் பற்றிய தகவலையும் உள்ளடக்கிப் பீடைகொல்லியைப் பயன்படுத்த வேண்டியுள்ள முறை பற்றிப் போதிய பணிப்புகளும் ;

(ஊ) முதலுதவி, முறிமருந்து என்பன பற்றிய தகவல் உட்பட போதிய எச்சரிக்கையும், முற்காப்புச் சின்னங்களும், கூற்றுக்களும் ;

(எ) பீடைகொல்லியானது இச்சட்டத்தின்கீழ் உரிமம் பெற்றுள்ளதென்பதைச் சுட்டிக்காட்டுவதற்காக "1980 ஆம் ஆண்டின் ........ ஆம் இலக்கப் பீடைகொல்லிகளைக் கட்டுப்படுத்தல் சட்டத்தின்கீழ் பதிவுசெய்யப்பட்டுள்ளது" என்ற உத்தியோகபூர்வமான சின்னமாக இருக்க வேண்டிய கூற்றும், பதிவாளரால் அதற்குக் குறித்தொதுக்கப்பட்ட உரிம இலக்கமும் ;

(ஏ) இச்சட்டத்தின்கீழான ஒழுங்குவிதிகளால் விதித்துரைக்கப்படக் கூடியவாறான வேறெவையேனும் விடயங்கள்.

(2) ஏழாம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின்கீழ் பீடைகொல்லி ஒன்றுக்கு உரிமம் அளிக்கப்பட்டுள்ளவிடத்து, இப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (அ) என்னும் பந்தியில் இருந்து (எ) என்னும் பந்தி வரையில் தரப்பட்டுள்ள எவையேனும் கருமங்கள் தொடர்பில் பதிவாளரின் முன்னங்கீகாரமின்றி மாற்றங்கள் எவையும் செய்யப்படுதலாகாது.

அங்கீகரிக்கப்பட்ட பீடைகொல்லி.

9. (1) ஏழாம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின்கீழ் பதிவாளர் உரிமம் அளிக்கும்போது, அவர் அப்பீடைகொல்லியை அங்கீகரிக்கப்பட்ட ஒரு பீடைகொல்லியென வெளிப்படுத்துதல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழ் செய்யப்பட்ட ஒவ்வொரு வெளிப்படுத்துகையும் அமைச்சரால் அங்கீகரிக்கப்படுதல் வேண்டும் என்பதுடன், கசெற்றில் வெளியிடப்படுதலும் வேண்டும்.

அங்கீகரிக்கப்பட்ட கொள்கலன் அல்லது பொதி.

10. பதிவாளர் பீடைகொல்லி ஒன்றுக்கு அங்கீகாரம் வழங்குகையில், அத்தகைய பீடைகொல்லியை பாதுகாப்பாகவும், பயனுறு வகையிலும் களஞ்சியப்படுத்துவதற்கும், கையாள்வதற்கும் தேவையான நிபந்தனைகளைக் கருத்திற்கொண்டு அத்தகைய கொள்கலன் அல்லது பொதி திருப்திகரமானதாகவுள்ளதென அவர் திருப்திப்படின், அத்தகைய பீடைகொல்லியைக் கொண்டுள்ள கொள்கலனையும் அல்லது பொதியையும் அங்கீகரித்தல் வேண்டும்.

உரிமத்தை இல்லாதாக்குதல்.

11. (1) எவரேனும் ஆள் இச்சட்டத்தின் ஏதேனும் ஏற்பாட்டை அல்லது அதன்கீழ் ஆக்கப்பட்ட ஏதேனும் ஒழுங்குவிதியை அல்லது கட்டளையை மீறுகின்றவிடத்து, அல்லது பொதுமக்கள் நலன்கருதி குழுவின் ஆலோசனையின்மீது அத்தகைய பீடைகொல்லி தொடர்பில் வழங்கப்பட்டுள்ள உரிமத்தை இல்லாதாக்குவது, இடைநிறுத்துவது, அல்லது திரிபுபடுத்துவது அவசியமானதெனப் பதிவாளர் கருதுகின்றவிடத்து அவர் அவ்வாறு செய்யலாம் என்பதுடன், அத்தகைய ஆளுக்கு வழங்கப்பட்ட இடைக்கால அனுமதிச்சீட்டை மீளப்பெறலாம், இடைநிறுத்தலாம் அல்லது திரிபுபடுத்தலாம்.

(2) பீடைகொல்லி ஒன்று தொடர்பில் வழங்கப்பட்ட உரிமத்தைப் பதிவாளர் (1) ஆம் உட்பிரிவின்கீழ் இல்லாதாக்குகின்றவிடத்து, இடைநிறுத்துகின்றவிடத்து அல்லது திரிபுபடுத்துகின்றவிடத்து, அல்லது இடைக்கால அனுமதிச்சீட்டை மீளப்பெறுகின்றவிடத்து, இடைநிறுத்துமிடத்து அல்லது திரிபுபடுத்துமிடத்து விடயத்துக்கேற்றவாறு அத்தகைய இல்லாதாக்குகைக்கான, இடைநிறுத்துகைக்கான அல்லது திரிபுபடுத்துகைக்கான அல்லது மீளப்பெறுகைக்கான காரணத்தை அவர் கூறுதல் வேண்டும்.

(3) பீடைகொல்லி ஒன்று தொடர்பில் (1) ஆம் உட்பிரிவின்கீழான ஏதேனும் இல்லாதாக்குகை அல்லது இடைநிறுத்துகை இடம்பெறுமிடத்து, அத்தகைய பீடைகொல்லியானது அங்கீகரிக்கப்பட்ட பீடைகொல்லியொன்றாக இல்லாதொழிதல் வேண்டும்.

(4) ஓராம் உட்பிரிவின்கீழான ஒவ்வோர் இல்லாதாக்குகையும் அல்லது இடைநிறுத்துகையும் கசெற்றில் வெளியிடப்படும் கட்டளைமூலமானதாதல் வேண்டும்.

12. பீடைகொல்லி ஒன்று தொடர்பில் வழங்கப்பட்ட உரிமம் ஒன்றை வைத்திருப்பவரால் அப்பீடைகொல்லியின் பொதியில், சுட்டுத்துண்டில் அல்லது கூட்டுச்சேர்க்கையில் மாற்றம் எதுவும், (அம்மாற்றத்திற்கான விண்ணப்பம் ஒன்று செய்யப்பட்டு, மூன்னப்பட்ட அத்தகைய மாற்றம் தொடர்பில் பதிவாளரிடமிருந்து அங்கீகாரம் கிடைக்கப்பெற்றாலன்றி) செய்யப்படுதலாகாது. பொதியை அல்லது கூட்டுச் சேர்க்கையை மாற்றுதல்.

13. (1) ஏழாம் பிரிவின்கீழ் விண்ணப்பம் ஒன்று நிராகரிக்கப்படுவதால், அல்லது 11 ஆம் பிரிவின்கீழ் உரிமம் ஒன்று இல்லாதாக்கப்படுவதால், இடைநிறுத்தப்படுவதால் அல்லது திரிபுபடுத்தப்படுவதால், அல்லது இடைக்கால அனுமதிச்சீட்டு ஒன்று மீளப்பெறப்படுவதால், இடைநிறுத்தப்படுவதால் அல்லது திரிபுபடுத்தப்படுவதால் இன்னலுறும் எவரேனும் ஆள், அத்தகைய நிராகரிப்புக்கு அல்லது இல்லாதாக்குகைக்கு, இடைநிறுத்துகைக்கு, மீளப்பெறுகைக்கு அல்லது திரிபுபடுத்துகைக்கு எதிராக, அத்தகைய ஆளுக்கு அத்தகைய முடிவு தெரிவிக்கப்பட்டதன் பின் அறுபது நாட்களுக்குள் இதனகத்துப்பின்னர் "செயலாளர்" எனக் குறிப்பீடு செய்யப்படும் கமத்தொழில் அபிவிருத்தி, ஆராய்ச்சி என்ற விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரினது அமைச்சுச் செயலாளருக்கு எழுத்திலான மேன்முறையீடு ஒன்றைச் செய்யலாம் என்பதுடன், செயலாளரானவர், தமக்குச் செய்யப்பட்ட ஏதேனும் மேன்முறையீட்டைக் கையாளுகையில், மேன்முறையீடு எந்தக் கட்டளைக்கு எதிராகச் செய்யப்பட்டதோ அந்தக் கட்டளையை உறுதிப்படுத்தலாம், வேறுபடுத்தலாம் அல்லது ஒழிக்கலாம். மேன்முறையீடுகள்.

(2) மேன்முறையீடு ஒன்றின்மீதான செயலாளரின் முடிவு எத்தகையனவுமான எல்லா நோக்கங்களுக்காகவும் முற்றானதும் இறுதியானதுமாக இருத்தல் வேண்டுமென்பதுடன், ஏதேனும் நீதிமன்றத்தில் கேள்விக்குட்படுத்தப்படுதலுமாகாது.

14. எவரேனும் ஆள், ஏதேனும் பீடைகொல்லியை— தடைவிதிப்பு.

(அ) அத்தகைய பீடைகொல்லி, பதிவுசெய்யப்பட்டதாகவும் பதிவாளரிடமிருந்து செல்லுபடியான ஓர் உரிமம் அல்லது ஓர் இடைக்கால அனுமதிச்சீட்டு கிடைக்கப்பெற்றதாகவும் இருந்தாலன்றியும்; அத்துடன்

(ஆ) அத்தகைய பீடைகொல்லி, அங்கீகரிக்கப்பட்ட கொள்கலன் ஒன்றில் அல்லது பொதி ஒன்றில் அடைக்கப்பட்டதாகவும் அங்கீகரிக்கப்பட்ட சுட்டுத்துண்டு ஒன்று அதன்மேல் துலாம்பரமாக ஒட்டப்பட்டதாகவும் இருந்தாலன்றியும்,

நாட்டிற்குள் உற்பத்திசெய்தலோ, சூத்திரித்தலோ, பொதியாக்குதலோ, விநியோகித்தலோ, விற்பனை செய்தலோ, விற்பனைசெய்ய முனைதலோ அல்லது ஒப்படைத்தலோ ஆகாது :

ஆயின், எவ்வாறாயினும், ஆராய்ச்சி நோக்கங்களுக்காகப் பீடைகொல்லியின் அல்லது பீடைகொல்லியின் சேர்பொருட்களின் குறித்துரைக்கப்பட்ட ஏதேனும் அளவைப் பதிவாளரின் எழுத்திலான சம்மதத்துடன் அங்கீகரிக்கப்பட்ட ஏதேனும் ஆராய்ச்சி ஒழுங்கமைப்பு இறக்குமதி செய்யுமிடத்து, இப்பிரிவின் முற்போந்த ஏற்பாடுகள் ஏற்புடையனவாகாது.

கலப்படம் செய்யப்பட்ட அழுகிய அல்லது பதனழிந்த பீடைகொல்லிகள்.

15. கலப்படம் செய்யப்பட்டுள்ள, அல்லது பயனற்றுப்போகும் வகையில் அல்லது அபாயகரமானதாகும் வகையில் அழுகியுள்ள அல்லது பதனழிந்துள்ள அல்லது களஞ்சியப்படுத்துவதை அல்லது பயன்படுத்துவதை அபாயகரமானதாக்கும் வகையில் பதனழிந்துள்ள அல்லது சேதமடைந்துள்ள கொள்கலன்களில் பொதியாக்கப்பட்ட ஏதேனும் பீடைகொல்லியை ஆளெவரும், நாட்டுக்குள் உற்பத்தி செய்தலோ, பொதியாக்குதலோ, விநியோகித்தலோ, விற்பனைசெய்தலோ, விற்பனைசெய்ய முனைதலோ அல்லது ஒப்படைத்தலோ ஆகாது.

உணவுப்பண்டங்களுக்கு அருகருகே பீடைகொல்லிகளைக் களஞ்சியப்படுத்தலும், இடம்பெயர்த்தலும், விற்பனை செய்தலும்.

16. உணவுப்பண்டங்களுக்கு அருகருகே அல்லது அத்தகைய உணவுப் பண்டங்களை மாசுபடுத்தக்கூடியதான அத்தகைய ஏதேனும் முறையில் ஏதேனும் பீடைகொல்லியை ஆள் எவரும் களஞ்சியப்படுத்துதலோ, இடம்பெயர்த்தலோ, விற்பனைசெய்தலோ அல்லது விற்பனைசெய்ய முனைதலோ ஆகாது.

அங்கீகாரத்தின்றி பீடைகொல்லிகளை இறக்குமதி செய்வதற்கான தடை.

17. குழுவின் ஆலோசனையின்பேரில் அளிக்கப்பட்ட பதிவாளரின் எழுத்திலான அங்கீகாரமின்றி, ஏதேனும் பீடைகொல்லியை ஆள் எவரும் இறக்குமதிசெய்தலாகாது.

பீடைகொல்லிகளை விளம்பரப் படுத்துதல்.

18. (1) பீடைகொல்லி ஒன்று நாட்டுக்குள் களஞ்சியப்படுத்தப்படும்போது, இடம்பெயர்க்கப்படும்போது, விநியோகிக்கப்படும்போது, விற்பனை செய்யப்படும்போது, விற்பனைசெய்ய முனையப்படும்போது, அல்லது ஒப்படைக்கப்படும்போது அதைப் பற்றியதாய் அதனுடன் இணைந்திருக்கின்ற எழுத்திலான, அச்சிடப்பட்ட அல்லது எழுத்து உருவிலான ஏதேனும் பொருள் 8 ஆம் பிரிவில் குறிப்பீடுசெய்யப்பட்டுள்ள விபரங்களின் சாராம்சத்தை உள்ளடக்கியிருத்தல் வேண்டும்.

(2) ஏதேனும் பீடைகொல்லியை பொய்யான, பிழைவழி உய்ப்பதான அல்லது ஏமாற்றுவதான முறையிலும் அத்துடன் அது பதிவுசெய்யப்பட்ட நிபந்தனைகளுக்கு ஒவ்வாத முறையிலும் விளம்பரப்படுத்துதல் சட்டமுறையற்றதாதல் வேண்டும்.

(3) ஏதேனும் விளம்பரத்தில் அல்லது உபாயத்தில் அடங்கியுள்ள ஒரு பீடைகொல்லிக்கான ஏதேனும் கோரிக்கை 8 ஆம் பிரிவில் குறிப்பீடுசெய்யப்பட்டுள்ள சுட்டுத்துண்டுக் கூற்றுக்களுக்கிணங்கவிருத்தல் வேண்டும் என்பதுடன், இப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் தேவைப்பாடுகளுக்கு முரணானதாக இருத்தலுமாகாது.

பீடைகொல்லிகளைப் பெரும்படியாகக் களஞ்சியப் படுத்துதல்.

19. (1) பீடைகொல்லிகளைப் பெரும்படியாகக் களஞ்சியப்படுத்தும் நோக்கத்திற்காக வைத்திருக்கப்படும் ஒரு விசேட களஞ்சியத்தில் அல்லாது, ஆள் எவரும் பீடைகொல்லிகளைப் பெரும்படியாக வேறு எங்கேனும் களஞ்சியப்படுத்துதல் ஆகாது. ஏற்றுதல் அல்லது இறக்குதல் நடைபெறாதபோது அக்களஞ்சியமானது பூட்டி வைத்திருக்கப்படுதல் வேண்டும்.

(2) களஞ்சியத்தில் உள்ள பொருட்களின் தீங்குவிளைவிக்கும் தன்மையைக் குறிக்கும் அறிவித்தல் ஒன்று களஞ்சியத்திற்கு வெளியே துலாம்பரமான இடமொன்றில் வெளிக்காட்டி வைக்கப்படுதல் வேண்டும்.

பயிர்களை அறுவடை செய்தல்.

20. உணவுப் பயிர்களில் பீடைகொல்லிகளைப் பயன்படுத்துவதற்கும், அவற்றை அறுவடைசெய்வதற்கும் இடையில் ஒழுங்குவிதிகளால் விதித்துரைக்கப்படக்கூடிய கால எல்லை ஒன்று கழிந்திருந்தாலன்றி அல்லது விதித்துரைக்கப்படக்கூடியவாறான அளவுகளுக்கு மேலதிகமான பீடைகொல்லி படிவுகளை உணவுப் பயிர்கள் கொண்டிருக்கின்றனவாயின் அன்றி, பீடைகொல்லிகள் பயன்படுத்தப்பட்ட அத்தகைய எவையேனும் உணவுப் பயிர்களை ஆள் எவரும் அறுவடை செய்தலோ விற்பனைசெய்ய முனைதலோ ஆகாது.

அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர்களும் அவர்களது தத்துவங்களும் பணிகளும்.

21. (1) இச்சட்டத்தின் நோக்கங்களை நிறைவேற்றுதற்கு அவசியமாகக் கூடியவர்களும், தமது திணைக்களங்களிலுள்ளவர்களுமான அத்தகைய எண்ணிக்கையினரான அலுவலர்களைப் பணிப்பாளர் பெயர் குறித்து நியமித்தல் வேண்டும்; இவர்கள் "அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர்கள்" என அறியப்படல் வேண்டும்.

(2) அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர் ஒருவர்—

(அ) இச்சட்டத்தின் ஏதேனும் ஏற்பாட்டை அல்லது அதன்கீழ் ஆக்கப்பட்ட ஏதேனும் ஒழுங்கு விதியை அல்லது கட்டளையை எவரேனும் ஆள் மீறியுள்ளாரா என்பதை நிச்சயப்படுத்தலாம்;

(ஆ) பீடைகொல்லிகளில் ஏதேனும் பதனழிவு, கலப்படம் அல்லது அழுகுதல் ஏற்பட்டுள்ளதா என்பதைத் தீர்மானிக்கும் நோக்கத்துக்காக அவற்றின் மாதிரிகளைப் பெறலாம்; அத்துடன்,

(இ) இச்சட்டத்தின் கீழான தத்துவங்களையும் கடமைகளையும் பணிகளையும் பிரயோகித்தல், புரிதல், அத்துடன் நிறைவேற்றுதல் தொடர்பான அல்லது அவற்றை முன்னேற்றுவதற்கான மற்ற எல்லாச் செயல்களையும் அல்லது காரியங்களையும் செய்யலாம்.

(3) அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் அலுவலர், இந்தச் சட்டத்தின் கீழான தமது பணிகளைப் புரிகையில், நாளில் நியாயமான எல்லா நேரங்களிலும், போதிய அறிவித்தல் கொடுத்த பின்னர் ஏதேனும் வளவுக்குள் புகலாம். அவ்வாறு உட்புகுதல் காரணமாகவோ, அல்லது இச்சட்டத்தின் கீழ்த் தத்துவங்களையும் கடமைகளையும் பணிகளையும் பிரயோகிப்பதற்கும் புரிவதற்கும் அத்துடன் நிறைவேற்றுவதற்கும் அவசியமாகவுள்ள எதனையும் அத்தகைய வளவிற்குள் நல்லெண்ணத்துடன் செய்தமை காரணமாகவோ அத்தகைய அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர் பொறுப்பாளியாதலாகாது.

மாதிரிகளை இரசாயனப் பகுப்பாய்வு செய்தல்.

22. (1) அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர் ஒருவர் பீடைகொல்லி ஒன்றின் மாதிரியைப் பெற்றதன்மேல் அதிகாரமளிக்கப்பட்ட இரசாயனப் பகுப்பாய்வாளர் ஒருவரைக்கொண்டு அதை இரசாயனப் பகுப்பாய்வு செய்விப்பதற்குத் தமக்குள்ள நோக்கத்தைப்பற்றி விற்பனையாளருக்கு அல்லது அவரின் முகவருக்கு உடனடியாக அறிவித்தல் வேண்டுமென்பதுடன் அம்மாதிரியைச் சரிசமமாக மூன்று பாகங்களாக உடனடியாகப் பிரித்து அப்பொருளின் தன்மைக்கு ஒத்த மாதிரியாக அத்தகைய ஒவ்வொரு பாகத்தையும் குறியிடு செய்வித்தும் முத்திரித்தும் விற்பனையாள

ருக்கு அல்லது அவரது முகவருக்கு ஒரு பாகத்தையும், அதிகாரமளிக்கப்பட்ட இரசாயனப் பகுப்பாய்வாளருக்கு ஒரு பாகத்தையும் பதிவாளருக்கு ஒருபாகத்தையும் ஒப்படைத்தலும் வேண்டும்.

(2) இரசாயனப் பகுப்பாய்வொன்றின் பெறுபேறு தொடர்பில் பிணக்கு ஒன்று எழுமிடத்து, பதிவாளரானவர், தமது கட்டுக்காப்பிலிருக்கும் மாதிரியின் அத்தகைய பாகத்தைத் தம்மால் பெயர்குறித்து நியமிக்கப்பட்ட நடுநிலை இரசாயனப் பகுப்பாய்வாளர் ஒருவருக்கு அனுப்பிவைத்தல் வேண்டும்.

(3) இச்சட்டத்தின்கீழான எவையேனும் வழக்குநடவடிக்கைகளில் இப்பிரிவின்கீழ் இரசாயனப் பகுப்பாய்வுக்காகப் பெறப்பட்ட ஏதேனும் மாதிரி பற்றியதும், ஓர் அதிகாரமளிக்கப்பட்ட இரசாயனப் பகுப்பாய்வாளரால் அல்லது நடுநிலை இரசாயனப் பகுப்பாய்வாளரால் கையொப்பமிடப்பட்டதுமான சான்றிதழ் ஒன்றைக் காண்பித்தல் அதில் கூறப்பட்டுள்ள நிகழ்வுகள் பற்றிய முதற்றோற்றச் சான்றாக இருத்தல் வேண்டும்.

கட்டணங்கள்.

23. (1) (அ) 6 ஆம் பிரிவின்கீழ் பீடைகொல்லி ஒன்றுக்கு உரிமம் பெறுவதற்கான ஒவ்வொரு விண்ணப்பமும், அத்துடன்

(ஆ) 13 ஆம் பிரிவின்கீழான ஏதேனும் நிராகரிப்புக்கு, இல்லாதாக்குகைக்கு, இடைநிறுத்துகைக்கு, மீளப்பெறுகைக்கு அல்லது திரிபுபடுத்துகைக்கு எதிரான ஒவ்வொரு மேன்முறையீடும்,

இச்சட்டத்தின் கீழ் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகளால் விதித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய கட்டணத்துடன் சேர்த்து அனுப்பப்படுதல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழ் செலுத்தப்படவேண்டியுள்ள அத்தகைய கட்டணத்துடன் சேர்த்து மேலதிகமாக இந்தச் சட்டத்தையும் அதன் கீழ் ஆக்கப்பட்ட எவையேனும் ஒழுங்குவிதிகளையும் பயனுறச் செயற்படுத்துவதற்காக செவ்வையான நிதி ஏற்பாட்டைச் செய்யும் பொதுவான நோக்கத்துக்காக, பீடைகொல்லி ஒன்றின் இறக்குமதியாளர், உற்பத்தியாளர், ஆக்கிரிப்பவர் அல்லது பொதியாக்குநர் அறவீடொன்று செலுத்துதல் வேண்டும் என இச்சட்டத்தின்கீழ் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகளினால் விதித்துரைக்கப்படலாம்.

இச்சட்டத்தை மீறுவதற்கான தண்டம்.

24. (1) இச்சட்டத்தின் அல்லது அதன்கீழ் ஆக்கப்பட்ட எவையேனும் ஒழுங்குவிதிகளின் ஏதேனும் ஏற்பாட்டை மீறுகின்ற அல்லது அதற்கு இணங்கியொழுகத் தவறுகின்ற ஒவ்வோர் ஆளும், இச்சட்டத்தின் கீழ் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும் என்பதுடன், நீதிவானொருவரினால் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல் இரண்டு ஆண்டுக்கான ஒரு காலப்பகுதிக்கு இருவகையிலொருவகையான மறியற்றண்டனைக்குத் தண்டனைத் தீர்ப்பளிக்கப்படுதல் வேண்டும்.

(3) இச்சட்டத்தின்கீழான தவறு ஒன்று ஆட்கள் குழுவொன்றால் புரியப்படும்போது அப்பொழுது—

(அ) அந்த ஆட்கள் குழுவானது கூட்டிணைக்கப்பட்ட குழுவொன்றாக இருந்தால், அந்தக் கூட்டிணைக்கப்பட்ட குழுவின் ஒவ்வொரு பணிப்பாளரும், முகாமையாளரும், செயலாளரும், அல்லது அலுவலரும் ; அல்லது

(ஆ) அந்த ஆட்கள் குழுவானது குழுமம் ஒன்றாக இருந்தால் அந்தக் குழுமத்தின் ஒவ்வொரு பங்காளரும்,

அந்தத் தவறுக்குக் குற்றவாளியாகக் கருதப்படுதல் வேண்டும் :

ஆயின், எவ்வாறாயினும், அத்தகைய ஆள் எவரும் அத்தகைய தவறானது தமது அறிவின்றிப் புரியப்பட்டது என்று அல்லது அத்தகைய தவறு புரியப்படுவதைத் தடுப்பதற்குப் பேரிய விழிப்புக் கவனத்தைத் தாம் பிரயோகித்தார் என்று எண்பித்தால், அந்தத் தவறுக்குக் குற்றவாளியாகக் கருதப்படுதலாகாது.

15. இச்சட்டத்தின் கீழான தவறு ஒன்றுக்காக எவரேனும் ஆளுக்குக் குற்றத்தீர்ப்பளிக்கும் நீதிமன்றமானது, இதனகத்து முன்னர் விதிக்கப்பட்ட தண்டனைகளுள் எவற்றையும் விதிக்கலாமென்பதுடன், நீதிமன்றம் உசிதமானதெனக் கருதினால், எப்பொருட்கள் தொடர்பில் அத்தவறானது புரியப்பட்டதோ அப்பொருட்கள் எல்லாம் அல்லது அவற்றுள் எவையும் கைப்பற்றப்பட்டு அரசுக்கு இறுப்பிக்கப்படுதல் வேண்டுமெனவும் கட்டளை இடலாம். இறுப்பித்தல்.

16. (1) விதித்துரைக்கப்படவேண்டுமென இச்சட்டத்தால் தேவைப்படுத்தப்பட்டுள்ள கருமங்கள் தொடர்பிலும் அல்லது எக்கருமங்கள் தொடர்பில் ஒழுங்குவிதிகள் ஆக்கப்படவேண்டுமென அதிகாரமளிக்கப்பட்டுள்ளதோ அக்கருமங்கள் தொடர்பிலும், அத்துடன் குறிப்பாகப் பின்வரும் எல்லாக் கருமங்கள் தொடர்பிலும் அல்லது அவற்றுள் எது தொடர்பிலும் அமைச்சர் ஒழுங்குவிதிகளை ஆக்கலாம் :— ஒழுங்குவிதிகள்.

(i) கட்டுத்துண்டில் குறிப்பிடப்படவேண்டிய நிறுவை முறையையும் அல்லது அளவை முறையையும் அல்லது நிறுவை முறைகளையும் அல்லது அளவை முறைகளையும், ஒட்டப்படவேண்டிய கட்டுத்துண்டின் பரிமாணம், நிறம் ஆகியவற்றையும் எடுத்துக்காட்டுதல் தொடர்பிலும் ;

(ii) அதிகமான அல்லது வழமைக்குமாறான தீங்குவிளைவிக்கும் தூள் அளவை அளிக்கும் பதார்த்தங்கள் அல்லது சொற்றொடர்கள் பற்றிய சிறப்பேற்பாடுகளை எடுத்துக்காட்டுதல் தொடர்பிலும் ; அத்தகைய சிறப்பேற்பாடுகள், குறிப்பாக—

(அ) குறித்தசில பதார்த்தங்களின் கன மதிப்பாய்வுக்கு ஏற்பாடுசெய்யலாம் ;

(ஆ) மூன்றாம் திறத்தவர்களையும், சூழலையும், காட்டுயிரினவகைகளையும் (சேதக் கெடுதி விளைவிக்கும் தாவரங்களையும் விலங்குகளையும் கட்டுப்படுத்துவது விரும்பப்படுமின்

றதோ அவை தவிர) பாதுகாப்பதற்கு அவசியமாகக் கூடியவாறான குறித்த சில பதார்த்தங்களைச் சந்தைப் படுத்தலை அல்லது விநியோகித்தலை ஒழுங்குபடுத்தலாம்;

(iii) இச்சட்டத்தின்கீழ் உரிமம் வழங்கப்பட்ட பீடைகொல்லிகளின் சந்தைப்படுத்தலும் விற்பனையும் எத்தேதிகளில் இல்லா தொழியுமோ அத்தேதிகளை நிர்ணயிக்கலாம் என்பதுடன், அத் தகைய பீடைகொல்லிகளை ஒழித்துக்கட்டுவதற்கான தேதியை யும் நிர்ணயிக்கலாம்.

(iv) பீடைகொல்லிகளை உற்பத்திசெய்வதில், சூத்திரிப்பதில் அல்லது பொதியாக்குவதில் ஈடுபட்டுள்ள எவரேனும் ஆளினால் அல்லது ஆட்கள் குழுவினால் பயன்படுத்தப்படுகின்ற தொழினுட்பத் திறமையும், சாதனமும் பற்றிய நியமத் தரங்களைத் தாபிக்க லாம்;

(v) ஏதேனும் தயாரிப்பை ஒரு பீடைகொல்லிச் சூத்திரிப்பாகப் பெயர் குறிப்பிடலாம்; அத்துடன்

(vi) பீடைகொல்லிகளைப் பயன்படுத்தும் மாதிரியையும் முறையையும் விதித்துரைக்கலாம்.

(2) அமைச்சரால் ஆக்கப்படும் ஒவ்வோர் ஒழுங்குவிதியும், கசெற்றில் வெளியிடப்படுதல் வேண்டுமென்பதோடு அத்தகைய வெளியீட்டுத் தேதி யன்று அல்லது அவ் ஒழுங்குவிதியில் குறித்துரைக்கப்படக்கூடிய அத் தகைய பின்னைய தேதியன்று நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.

(3) அமைச்சரால் ஆக்கப்படும் ஒவ்வோர் ஒழுங்குவிதியும் கசெற்றில் வெளியிடப்பட்டதன்பின்னர் இயன்றளவு விரைவாக அங்கீகாரத்திற் கெனப் பாராளுமன்றத்தின் முன்னர் கொணரப்படுதல் வேண்டும். அவ் வாறு அங்கீகரிக்கப்படாத ஒழுங்குவிதி எதுவும், அவ்வாறு அங்கீகாரம் மறுக்கப்பட்ட தேதியிலிருந்து, ஆனால் அதன்கீழ் முன்னர் செய்யப்பட்ட எதற்கும் பங்கமின்றி, ஒழிக்கப்பட்டுவிட்டதாகக் கருதப்படுதல் வேண் டும்.

(4) ஏதேனும் ஒழுங்குவிதி அவ்வாறு ஒழிக்கப்பட்டுவிட்டதாகக் கரு தப்படும் தேதி பற்றிய அறிவிப்பு கசெற்றில் வெளியிடப்படுதல் வேண்டும்.

பொருள் கோடல்.

27. இச்சட்டத்தில் சந்தர்ப்பம் வேறுவிதமாகத் தேவைப்படுத்தினா லொழிய—

"உயிர் கலவைக்கூறு" என்பது, சூத்திரிக்கப்பட்ட தயாரிப்பு ஒன் றுக்கு அதன் பீடைகொல்லிப் பண்புகளைக் கொடுக்கும் ஏதே னும் பதார்த்தம் என்று பொருளாகும்;

"வலுவூட்டி" என்பது, பீடைகொல்லி ஒன்றின் செயற்பாட்டுத் திறனுக்கு உறுதுணையாகப் பயன்படுத்தப்படும் ஏதேனும் பதார்த்தம் என்று பொருளாகும்;

"அதிகாரமளிக்கப்பட்ட இரசாயனப் பகுப்பாய்வாளர்" என்பது, அர சாங்க இரசாயனப் பகுப்பாய்வாளர், மேலதிக அரசாங்க இரசா யனப் பகுப்பாய்வாளர், பிரதி அரசாங்க இரசாயனப் பகுப்பாய்

வாளர் ஒருவர், சிரேட்ட உதவி அரசாங்க இரசாயனப் பகுப்பாய்வாளர் ஒருவர், உதவி அரசாங்க இரசாயனப் பகுப்பாய்வாளர் ஒருவர் எனவும் அத்துடன் அத்தகைய ஒருவராகச் செயற்படுவதற்கென கசெற்றில் வெளியிடப்படும் அறிவித்தல் மூலம் அமைச்சரால் அதிகாரமளிக்கப்பட்ட வேறு எவரேனும் ஆள் எனவும் பொருளாகும்.

"பீடை" என்பது, பயிர்களுக்கு, களஞ்சியப்படுத்தப்பட்ட தயாரிப்புகளுக்கு, பதனிடப்பட்ட உணவுகளுக்கு, மரத்துக்கு, ஆடைகளுக்கு, துணிகளுக்கு அல்லது உயிரற்ற பொருட்களுக்குத் தீங்கானதும், கெடுதல் விளைக்கின்றதும் அல்லது விரும்பத்தகாததும், அல்லது சுகாதாரத்திற்கும் நல்வாழ்வுக்கும் அருவருப்பானதுமான ஏதேனும் பூச்சி, கொறியுயிர், பறவை, மீன், மொலஸ்கா, நெமற்றோடு, பங்கசு, களை, நுண்ணங்கி, வைரசு அல்லது ஊறு விளைவிக்கும் வேறு வகையினதான தாவரம் அல்லது விலங்கினம் என்று பொருளாகும் என்பதுடன், இச்சட்டத்தின் கீழ் ஆக்கப்படும் ஒழுங்குவிதிகளில் குறிப்பாக உள்ளடக்கப்படக் கூடியனவான அல்லது அவற்றிலிருந்து விலக்கப்படக்கூடியனவான ஏதேனும் பீடை தவிர்ந்த மனிதனின் புறவொட்டுண்ணிகளையும், விலங்குகளின் புறவொட்டுண்ணிகளையும் உள்ளடக்குதலும் வேண்டும்;

"பீடைகொல்லி" என்பது, பீடை ஒன்றைக் கட்டுப்படுத்துவதற்காகப் பயன்படுத்துவதற்கு முன்னப்பட்ட அல்லது பயன்படுத்தப்பட்ட ஏதேனும் பதார்த்தம் என்று பொருளாகும் என்பதுடன், தீவிர கலவைக்கூறுகளையும், வலுவூட்டிகளையும், பீடைகொல்லிச் சூத்திரிப்புக்களையும் உள்ளடக்குதலும் வேண்டும்;

"பீடைகொல்லிச் சூத்திரிப்புக்கள்" என்பது, பின்வரும் ஒன்றோ அல்லது பலவோவாய நோக்கங்களுக்காக, அதாவது, இச்சட்டத்தின் கருத்தெல்லைக்குட்பட்ட ஏதேனும் பீடையை அழிப்பதற்காக அல்லது விரட்டுவதற்காக, அல்லது தாவரச் சீராக்கியாக, இலையுதிர்த்தியாக அல்லது உலர்த்தியாக அல்லது வலுவூட்டி ஒன்றாக அதன் வளர்ச்சியைத் தடுப்பதற்காக அல்லது அதன் தாக்கங்களைக் குறைப்பதற்காக விற்கப்பட்ட, வழங்கப்பட்ட, பயன்பாட்டுக்காக இறக்குமதிசெய்யப்பட்ட அல்லது பயன்படுத்தப்பட்ட எவையேனும் சேர்க்கப்பட்ட அல்லது சேர்க்கப்படாத தயாரிப்புகள் என்று பொருளாகும் என்பதுடன், இச்சட்டத்தின்கீழ் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகளால் அவ்வாறு பெயர்குறிக்கப்பட்ட அதையொத்த ஏதேனும் தயாரிப்பையும் உள்ளடக்கும்.